**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.**
**முன்னிலை – திருமதி. ஜெ. ராதிகா, எம்.ஏ., எம்.எல்,**
**2025–ம் ஆண்டு ஜுலை திங்கள் 9–ம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் ஆனி திங்கள்–25 ம் நாள்**
**அமர்வு வழக்கு எண். 120/2021ல்**
**குற்றவியல் பல்வகை மனு எண். 16/ 2025**

---

அருண் (எ) அருண்குமார் (வயது 30/2025) (6ம் எதிரி)
த/பெ. ரவிச்சந்திரன்.

... மனுதாரர் / 6ம் எதிரி

... எதிர் ...

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
கும்பகோணம் தாலுக்கா காவல் நிலையம்,
(குற்ற எண்.120/2018)

... எதிர்மனுதாரர் / குற்ற முறையீட்டாளர் /புகார்தாரர்

இந்த குற்றவியல் பல்வகை மனுவானது கடந்த 01.07.2025 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்ததில் மனுதாரர் / 6ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். சரத்குமார் அவர்களும் அரசு தரப்பில் திரு.B.விஜயகுமார், அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.....

## ஆணையுரை

இந்த குற்றவியல் பல்வகை மனுவானது சட்டப்பிரிவு 262 BNSS. ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் / 6ம் எதிரியை, கும்பகோணம், தாலுக்கா காவல் நிலைய குற்ற எண்.120/2018லிருந்து விடுவித்து உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:51:11 +0530

**2) <u>மனுதாரர்/6ம் எதிரி தாக்கல் செய்த மனுவின் சாராம்சம் பின்வருமாறு</u>**

இந்த மேற்படி குற்றமுறையீட்டாளரால், மேற்படி குற்ற எண் 120/2018ல் இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 307, 302, 326, 149 ஆகியவற்றின்கீழ் மனுதாரர் /எதிரிக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/எதிரிக்கு எதிராக, மேற்படி குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையானது சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி அமர்வு வழக்கு எண்ணில் குற்றச்சாட்டு வனைதலுக்காக சமூகம் நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் இருந்து வருகிறது.

3) குற்றமுறையீட்டாளரால், மேற்படி மனுதாரர் /எதிரிக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 173–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்களின் வாயிலாக மேற்படி மனுதாரர்/எதிரியை மேற்படி குற்ற வழக்கிலிருந்து விடுவிக்க ஏதுவான கூறுகள் பின்வருவன :–

(i) மனுதாரர்/எதிரி மேற்கண்ட முகவரியில் கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு வசித்து வந்துள்ளார். அதன் பின்னர் தனது குடும்பத்தினரோடு திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாநகரம், உறையூரில் கூலி வேலை செய்து, வாடகை வீட்டில் தற்போதுவரை வசித்து வருகிறார். மேலும் மனுதாரர்/எதிரியின் முழு பெயர். தகப்பனார் பெயர், முகவரி ஏதும் குறித்து மேற்கண்ட குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்நிலை புகார்தாரரால் எவ்வித தகவல்களும் மனுதாரர்/எதிரிக்கு எதிராக குறிப்பிட்டு புகார் அளிக்கப்படவில்லை. மேற்படி முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆசாரி மகன் அருண் என்பவர் குறித்த எவ்வித தகவல்களும் நிகழ்நிலை புகார்தாரரால் புகாரில் குறிப்பிட்டு கூறப்படவில்லை. மேலும் மனுதாரர்/எதிரியாகிய அருண் (எ)


JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:51:21 +0530

அருண்குமாரின் தகப்பனார் பெயர் ரவிச்சந்திரன் ஆகும். மேற்படி புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசாரி மகன் அருண் என்பவர் குறித்த எவ்வித தகவல்களும் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

(ii) மனுதாரர்/எதிரி, மேற்படி குற்றமுறையீட்டாளரால் உண்மைக்குப் புறம்பான வகையில் எவ்வித ஆதாரங்களும் இன்றி சட்டவிரோதமாக மேற்படி குற்ற எண்ணில் எதிரியாக பொய்யான வகையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் மேற்படி குற்றப் பத்திரிக்கையில் மனுதாரர்/எதிரி எவ்வித அடிப்படை முகாந்திரமும் இன்றி சட்டத்திற்கு புறம்பாக சேர்க்கப்பட்டுள்ளார்.

(iii) மேற்படி குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில், மேற்படி குற்றம் சம்மந்தமாக மனுதாரர்/எதிரியை சம்பவம் நடந்ததாக எடுத்துரைக்கப்பட்டுள்ள நேரத்தில், சம்பவம் நிகழ்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கண்ணுற்றதாக புகார்தாரர் மற்றும் சாட்சிகளின் வாயிலாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு மேற்படி குற்றமுறையீட்டாளர் பதிவுகள் ஏதும் செய்யவில்லை. மேலும் சூழ்நிலை சாட்சியங்களாக மனுதாரர்/எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்கள் மேற்படி குற்றமுறையீட்டாளரால் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

(iv) மேலும் மனுதாரர்/எதிரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் எவ்வித வழக்கு சான்று பொருட்களும் மேற்படி குற்றமுறையீட்டாளரால் இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை. மேலும் மனுதாரர்/எதிரி அளித்த தகவலின் அடிப்படையிலும் மேற்படி குற்ற வழக்கில் எவ்வித சான்று பொருட்களும் இவ்வழக்கின் எதிரிகள் வேறு எவரிடமிருந்தும் கைப்பற்றப்படவில்லை.

(v) மேற்படி குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் மனுதாரர்/எதிரிக்கு எதிராக நேரடியாக எவ்வித சாட்சியங்களும், சான்று பொருட்களும், குற்றம் சம்மந்தமான ஆவணங்களும் மேற்படி மனுதாரர்/எதிரி மேற்படி குற்ற செயலில்



JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:51:32 +0530

ஈடுபட்டுள்ளார் என்பதனை அறுதியிட்டு கூறும் வண்ணம் மேற்படி குற்ற முறையீட்டாளரால் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

(vi) மேற்படி குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளிடமிருந்து, மேற்படி குற்றமுறையீட்டாளர் தரப்பில் பெறப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் மனுதாரர்/எதிரிக்கு எதிராக. மேற்படி குற்றமுறையீட்டாளரால் சமூகம் நீதிமன்றத்தில் உண்மைக்கு மாறாக இயந்திரத்தன்மை கொண்ட வகையில் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(vii) குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் உரைக்கப்பட்டுள்ள குற்ற செயலில் மனுதாரர்/எதிரி ஈடுபடவில்லை. மேலும் மேற்படி மனுதாரர்/எதிரி எவ்வித குற்ற செயலும் செய்யாத அப்பாவியாவார். மனுதாரர்/எதிரியின் தாயார் மற்றும் தகப்பனார் ஆகிய இருவரும் இறந்துவிட்ட நிலையில், மனுதாரர்/எதிரி மட்டுமே தனது சுய உழைப்பின் அடிப்படையில் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வருகின்றார்.

(viii) மேற்படி மனுதாரர்/எதிரி சட்டத்திற்கும் சமூகம் நீதிமன்றத்திற்கும். கட்டுப்பட்டு நடக்கக்கூடிய நபராவார். மேலும் மேற்படி மனுதாரர்/எதிரி பொருளாதார ரீதியாக மிகவும் சிரமமான நிலையில் இருந்து வருகின்றார். மனுதாரர்/எதிரிக்கு உடல்நிலை பாதிப்படைந்து மஞ்சள் காமாலை நோய்க்கு தொடர் இயற்கை மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வருகின்றார் என்பதனை சமூகம் நீதிமன்றத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறார்.

**4)** மனுதாரர்/எதிரி எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபட்டது கிடையாது. மனுதாரர்/எதிரிக்கு எதிராக, மேற்படி குற்றமுறையீட்டாளரால் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையானது உண்மைக்குப் புறம்பாகவும், மனுதாரர்/எதிரி மேற்படி குற்ற செயலில் ஈடுபட்டு உள்ளார் என்பதனை அறுதியிட்டு நிரூபிக்க தவறி உள்ளது என்பதனையும், மேலும் மனுதாரர்/எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையானது பொய்யான சங்கதிகளை



JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:51:41 +0530

உள்ளடக்கியது என்பதனையும் மனுதாரர்/எதிரி தரப்பில் சமூகம் நீதிமன்றத்தில் தயவோடு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே சமூகம் கோர்ட்டார் அவர்கள், மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யும் இந்த BNSS சட்ட பிரிவு 262–ன் கீழான இம்மனுவினை ஏற்று, மேற்படி குற்ற வழக்கிலிருந்து மனுதாரர்/எதிரியை விடுவித்து உத்தரவிட வேண்டுமாய் மனுதாரர்/எதிரி தரப்பில் பணிந்து பிரார்த்தித்து வேண்டப்படுகிறது.

**3) <u>எதிர்மனுதாரர் / அரசு தாக்கல் செய்த எதிர்உரையின் சாராம்சம் பின்வருமாறு</u>**

இந்த புகார்தாரர் / குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆட்சேபணைகள்.

(i) மேற்படி குற்றமுறையீட்டாளரால் ஷை குற்ற எண்ணில் இ.த.ச. பிரிவுகள் 147, 148, 149, 294(பி), 302, 307, 324, 326 ஆகிய பிரிவுகளின்கீழ் மேற்படி மனுதாரர்/எதிரிக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மேற்படி மனுதாரர்/ எதிரிக்கு எதிராக ஷை குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையானது சமூகம் நீதிமன்றத்தில் ஷை அமர்வு வழக்கு எண்ணில் குற்றச்சாட்டு வனைதலுக்காக சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது.

(iii) மனுதாரர்/ எதிரிக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் கு.வி.ந.மு.ச. 173ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்களின் வாயிலாக உள்ள கூறுகள் மனுதாரரை குற்ற வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு எதிராக உள்ள கூறுகள் பின்வருவன.

(iv) மேற்கண்ட முகவரியில் மனுதாரர்/ எதிரி பத்து வருடங்களுக்கு முன்பு வசித்து வந்தார் அதன்பிறகு அவரது குடும்பத்தினரோடு திருச்சிராபள்ளி மாவட்டம். திருச்சிரப்பள்ளி மாநகரம் உறையூரில் கூலி வேலை செய்து வாடகை வீட்டில் வசித்து வருகிறார். தற்போது வரை



JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:51:49 +0530

வாடகை வீட்டில் இருந்து வருகின்றார். பாரா (1)ல் மனுதாரரின் / எதிரியின் முழு பெயர், தகப்பனார் பெயர், முகவரி குறித்த மேற்கண்ட குற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்நிலை புகார்தாரரால் தகவல்கள் மனுதாரர்/ எதிதிக்கு எதிராக குறிப்பிட்டு புகார் அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதே முதல் பாரா (1)ல் முதல் தகவல் அறிக்கையில் (FIR)ல் பதிவு செய்யப்பட்டுள்ள ஆசாரி மகன் அருன் என்பவர் குறித்த தகவல்களும் நிகழ்நிலை புகார்தாரரால் புகாரில் பெயர்கள் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது மற்றும் மனுதாரர்/ எதிரியாகிய அருண் (எ) அருண்குமாரின் தகப்பனார் பெயர் ரவிச்சந்திரன் ஆகும். மேற்படி தகவல்களும் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(v) மேலும் குற்றமுறையீட்டாளர்கள் உண்மைக்கு புறம்பாக இல்லாமல் ஆசாரி மகன் அருன் (எ) அருண்குமாரை மேற்கண்ட குற்ற எண்ணில் சட்டவிரோதமாக இல்லாமலும் ஆதாரங்களுடனும் தக்க சாட்சியங்களுடன் எதிரியாக சரியான கூற்றுகளுடன் சேர்க்கப்பட்டுள்ளார் என்பதை மேற்கண்ட கூற்றின்படி அறியப்படுகிறது. மேலும் முக்கிய அம்சமாக மனுதாரர்/ எதிரியை அனைத்து அடிப்படை முகாந்திரத்துடன் சேர்த்து சட்டத்திற்கு உட்பட்டு சேர்க்கப்பட்டு உள்ளார். பாரா (ii) குறிப்பிட்டது போலவே மேற்படி குற்றமுறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் மனுதாரர்/ எதிரியை சம்பவம் நடந்ததாக கூறப்பட்டுள்ள நேரத்தில் சம்பவம் நடந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள இடத்தில் சாட்சிகளின் முந்தைய புகார் வாக்குமூலம் (confession) இந்திய சாட்சிய சட்டப்படி எதிரியிடம் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் சூழ்நிலை சாட்சியங்களாக (circumstances evidence) பதிவுகளும் குறிப்பிட்டு சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் தக்க ஆதாரங்களுடன் அனைத்து குற்றமுறையீட்டாளரால் / புகார்தாரரால் குற்ற இறுதி அறிக்கையில் அனைத்து வகையிலும் ஆதாரங்களுடன் குறிப்பிடப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்/எதிரியுடன் வாக்குமூலம் அடிப்படையில் அணைத்து விதமான



JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:51:59 +0530

வழக்கு சான்று பொருட்களும் ஷை முறையீட்டாளரால் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டது. மேலும் மனுதாரர்/எதிரி அளித்த தகவலின் அடிப்படையிலும் மேற்படி குற்ற வழக்கில் அனைத்துவித சான்றுகளும் பொருள்களும் இவ்வழக்கில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் மனுதாரர்/ எதிரிக்கு எதிராக நேரடியாக அனைத்து சாட்சியங்களும் சான்று பொருட்களும் குற்றம் சம்பந்தமான ஆவணங்கள் மேற்படி மனுதாரர்/ எதரி ஷை குற்ற செயலில் ஈடுபட்டுள்ளார் என்பதையும் கூறும் வண்ணம் குற்றமுறையிட்டாளர்/புகார்தாரரால் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாரா (iii)ல் குறிப்பிட்டதுபோல் குற்றமுறையிட்டாளரால் தாக்கம் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கைளில் எதிரிகளிடமிருந்து குற்றமுறையிட்டாளர் தரப்பில் பெறப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் மனுதாரர்/எதிரிக்கு மேற்படி குற்றமுறையீட்டாளரால் சமூகம் நீதிமன்றத்தில் உண்மைக்கு இணங்க வகையில் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்துள்ளது. குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் உரைக்கப்பட்டுள்ள குற்ற செயலில் மனுதாரர்/ எதிரி ஈடுபட்டுள்ளார் என்பதையும் மேலும் மனுதாரர்/ எதிரி எவ்வித குற்ற செயலும் செய்யாதவர் போன்று பாசாங்கு காட்டுகிறார் என்றும் எனவே மனுதாரர்/ எதிரிக்கு குற்றம் செய்ததற்கான தொடர்பு இருப்பதாகவும் தக்க தண்டனை வழங்க வேண்டும் எனவும் மேற்கண்ட சங்கதிகள் கூறுகிறார். மனுதாரர்/ எதிரிக்கு உடல்நிலை சிகிச்சை மேற்கொண்டு வருகிறார் என்பதற்கான எவ்வித மருத்துவ சான்றுகளும் சமர்பிக்கப்படவில்லை என்பதாலும் (Medical certificate) எனவே மனுதாரர்/எதிரிக்கு ஆதரவாக ஆவணங்கள் சாட்சிகள் இருப்பதால் முன் விரோதம் சூழ்நிலை சாட்சிகள் போன்ற சங்கதிகள் பற்றி முழுமையாக நீதிமன்ற சாட்சிய விசாரணையில் தான் தெரியவரும். ஆகையால் மனுதாரர்/ எதிரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள டிஸ்சார்ஜ் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி


JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:52:22 +0530

செய்ய கேட்டுக்கொள்கிறேன். மனுதாரர்/எதிரி எவ்வித குற்ற செயலில் ஈடுபடவில்லை என்பது உண்மைக்கு புறம்பான ஒன்று எனவும் தெரிகிறது. மேலும் மனுதாரர்/ எதிரிக்கு எதிராக குற்றமுறையீட்டாளரால் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற அறிக்கையானது சாட்சியங்கள் சான்று பொருள்கள் சரியாக உள்ளது எனவும் மனுதாரர் /எதிரி எவ்வித குற்றத்திலும் ஈடுபடவில்லை என்று மனுதாரர்/ எதிரியே விசாரணையில் நிரூபிக்க வேண்டும். அதற்கு மேற்படி சமூகம் நீதிமன்றத்தில் Trial நடத்தினால் மட்டுமே உண்மை சங்கதிகளை கண்டறிய முடியும் என்பதை குற்றமுறையீட்டாளரால் சமூகம் நீதிமன்றத்தில் தெரிவித்து கொள்ளப்படுகிறது. ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள டிஸ்சார்ஜ் மனுவை எதிர்மனுதாரர்கள் செலவுகள் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறார்.

**4)** மனுதாரர் / 6ம் எதிரி தரப்பில், அவரை கும்பகோணம் தாலுக்கா காவல் நிலைய குற்ற எண்.120/2018 வழக்கிலிருந்து விடுவித்து உத்தரவிட கோரி சட்டப்பிரிவு 262 BNSS ன்கீழ் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

**5)** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில். இந்த வழக்கின் புகாரானது 06.05.2018 அன்று சிகிச்சையிலிருந்த புகார்தாரர் ரஞ்சித்குமார் என்பவரிடம் அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் பெறப்பட்டு கும்பகோணம் தாலுக்கா காவல் நிலைய குற்ற எண்.120/2018ன் கீழ் இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294 (பி), 324, 307, மற்றும் 302ன்கீழ் அன்றே 06.05.2018 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் புலன் விசாரணை அதிகாரியால் சாட்சி, சான்றாவணங்களின் அடிப்படையில் 1 முதல் 7 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294 (பி), 324, 307, 302, 326 மற்றும் 149ன்கீழ்



JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:52:30 +0530

26.10.2018 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.120/2021 ஆக கடந்த 16.09.2021 அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு குற்றச்சாட்டு வனைவதற்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் 2021–ம் வருடம் முதல் நிலுவையில் இருந்து வரும் இந்த வழக்கில் இந்த மனுதாரர்/6ம் எதிரி 07.03.2025 அன்று ச/பி 262 BNSS Act–ன் கீழ் தன்னை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கவேண்டுமென்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதற்கு கூறும் முக்கிய காரணம் என்பது மனுதாரரரின் தகப்பனார் பெயர் ஆசாரி என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் தன்னுடைய தகப்பனார் பெயர் இரவிசந்திரன் என்றும், உண்மையில் புகாரிலும் சாட்சியத்திலும் சொல்லியுள்ள நபர் தான் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். இந்த வழக்கில் இந்த மனுதாரர் 08.05.2018 அன்று சென்னை சாலை, கோவிலாச்சேரி அன்னைக் காலேஜ் பஸ்டாப் அருகில் வைத்து கைது செய்யப்பட்டு காவலுக்கு உட்படுத்தப்பட்டப்போது நீதித்துறை நடுவரிடம் தான் இந்த வழக்கில் சம்மந்தப்படாத நபர் என்று சொல்லவில்லை. கைதுக்கு உட்படுத்தப்பட்ட போதும் இறுதி குற்றஅறிக்கையிலும், மனுதாரரான இந்த 6–ம் எதிரியின் பெயர் அருண்குமார் த/பெ. இரவிசந்திரன் என்று தான் உள்ளது முகவரி நம்பர்.7, கள்ளுக்கடை சந்து, வட்டிப்பிளையார்கோவில், கும்பகோணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்நீதிமன்றத்தில் 03.03.2023 அன்று பிணைநீக்கம் கோரி தாக்கல் செய்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆதார் நகலில் இந்த மனுதாரர் அருண்குமார் த/பெ. இரவிசந்திரன் நம்பர்.7, கள்ளுக்கடை சந்து, வட்டிப்பிளையார்கோவில், கும்பகோணம் என்று பெயர், விலாசம் சரியாக ஒத்து அமைந்துள்ளது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்த பிணை மனுவிலும், இதே முகவரிபோட்டு பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தான் 10 வருடங்களுக்கு மேலாக திருச்சியில் வசிப்பதாக சொல்வதற்கு எந்த ஆதரவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் இல்லை. ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில் தன்னை இந்த வழக்கில் சேர்த்திருப்பதாக மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டாலும், புலன்விசாரணை அதிகாரி சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்களின் அடிப்படையில் எதிரிகளை நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் இறுதி குற்றஅறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது புலனாகிறது. குற்ற இறுதி அறிக்கையில், ரஞ்சித்குமார் த/பெ. செல்லமுத்து கள்ளுக்கடை சந்து, வட்டிபிள்ளையார் கோவில் கும்பகோணம் என்பவர், கும்பகோணம் அரசு மாவட்ட மருத்துவமனையில் வைத்து கும்பகோணம் தாலுக்கா காவல் நிலையத்தில் பணிபுரியும் உதவி ஆய்வாளர் திரு. பாண்டியன் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கில் தாக்கப்பட்டு இறந்து போன முருகன் என்பவர் சாட்சி ரஞ்சித்குமாரின் அண்ணன் மற்றும் இவ்வழக்கில் தாக்கப்பட்டு இறந்து போன அர்ஜூன் (எ) அர்ச்சுணன் என்பவர் சாட்சி ரஞ்சித்குமாரின் அண்ணன் முருகனின் மகன் ஆவார் என்றும், காயம்பட்ட செல்லமுத்து அவரின் அப்பா, காயம்பட்ட ராஜாராமன் அவருடைய அண்ணன், அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். அதேபோல் மார்ஜினில் கண்ட எதிரி–1 ஜெய்சங்கர் மற்றும் எதிரி–2 மலர்செல்வம் இருவரும் அண்ணன் தம்பிகள் மற்றும் எதிரி–3 வைரவேல் எதிரி 4 ராஜவேல் எதிரி 5 சக்திவேல் ஆகியோர்கள் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள், அதாவது எதிரி–1 ஜெய்சங்கர் என்பவரின் மகன்கள் ஆவார்கள் என்றும், எதிரி– 6 அருண்(எ) அருண்குமார் எதிரி–7 விஸ்வா (எ) விஸ்வநாத் ஆகியோர்கள் எதிரி –1 ஜெய்சங்கரின் உறவினர் ஆவார்கள் என்றும், கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு, எதிரி– ஜெய்சங்கர் என்பவரின் மகள் சத்தியதேவியை சாட்சி –1 ரஞ்சித்குமாரின் உறவினர் தஞ்சாவூரைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் சாண்டல்லியன் என்பவர் காதலித்ததால் பிரச்சனை ஏற்பட்டு முன் விரோதம் இருந்து வந்துள்ள நிலையில், 01.05.2018–ம் தேதி கும்பகோணம் வட்டி பிள்ளையார்கோவில், கள்ளுக்கடை சந்தில் நடைபெற்ற காளியம்மன் கோவில் திருவிழாவிற்கு சாண்டல்லியன் என்பவர் தஞ்சாவூரிலிருந்து வந்து சாட்சி–1 ரஞ்சித்குமார்



JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:52:45 +0530

வீட்டில் தங்கியுள்ளார். 05.05.2018 ம் தேதி இரவு சாண்டல்லியன் சாட்சி – 1 ரஞ்சித்குமார் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த போது எதிரிகள் ஜெய்சங்கர், மலர்செல்வம், வைரவேல், ராஜவேல், சக்திவேல் ஆகியோர்கள் வந்து சாண்டல்லியனை குச்சிகாரி, தேவடியா மொவனே எங்கடா இங்கு வந்த என்று முன்பகை காரணமாக அசிங்கமாக திட்டி தகராறு செய்தபோது சாண்டல்லியனை சாட்சி –1 ரஞ்சித்குமார் வீட்டின் உள்ளே அமைதியாக அழைத்து சென்றுவிட்டார் என்றும், மறுநாள் 06.05.2018ந் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் வட்டி பிள்ளையார்கோவில் கள்ளுக்கடை சந்தில் உள்ள அமுல்ராஜ் வீட்டு முன்னாடி வேறு விஷேசத்திற்கு வந்த சாட்சி–1 ரஞ்சித்குமார், அவரது அப்பா செல்லமுத்து, அண்ணன்கள் முருகன், ராஜாராமன், அண்ணன் மகன் அர்ஜூன்(எ) அர்ச்சுணன் ஆகியோர்கள் நின்று பேசி கொண்டு இருந்தபோது திடீரென எதிரிகள் 1, 2 ஆகியோர்கள் கையில் தலா ஒரு அருவாளுடன் எதிரிகள் 3, 4, 5 ஆகியோர்கள் கையில் தலா ஒரு ஒரு கத்தியுடனும், எதிரிகள் 6,7 ஆகியோர்கள் கையில் தலா ஒரு உருட்டு கட்டையுடனும், சட்டவிரோதமாக சாட்சிகள் ரஞ்சித்குமார். செல்லமுத்து, ராஜாராமன், முருகன், அரச்சுணன் ஆகியோர்களை கொலை செய்ய வேண்டுமென்ற ஒருமித்த கருத்துடன் ஒன்றுகூடி சாட்சிகள் இருந்த இடத்திற்கு வந்து சம்பவத்தை ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டில் சொல்லப்பட்டுள்ளது. **இந்தக் கள்ளுக்கடை சந்து, வட்டிப்பிளையார்கோவில், கும்பகோணம் என்ற முகவரியில் தான் 6–ம் எதிரியின் ஆதார் விலாசம் உள்ளது. மற்ற 1 முதல் 5 எதிரிகளும் இதே பகுதியை சார்ந்தவர்கள் தான்.**

**6)** மேலும் இந்த மனுதாரரான 6–ம் எதிரி அருண்குமார் பெயரில் கும்பகோணம் தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 253/2016 சட்டப்பிரிவு 147, 148, 341, 324, மற்றும் 307 இதச.ன்கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் தொடர்புடைய அமர்வு வழக்கு கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்பதும் மனுதாரர் / எதிரி மீது குற்ற சரித்திர பதிவேடு பராமரிக்கப்பட்டு H.S.No. 363/2018



JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:52:52 +0530

தொடங்கப்பட்டு அவரது செய்கை கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதும் அரசு தரப்பு ஆட்சேபனையின் மூலம் அறிய முடிகிறது. இந்நிலையில் மனுதாரர் / 6ம் எதிரி அருண் (எ) அருண்குமார் சட்டப்பிரிவு 262 BNSS ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்து, கும்பகோணம் தாலுக்கா காவல் நிலைய குற்ற எண்.120/2018ன்கீழான குற்ற வழக்கிலிருந்து தன்னை விடுவித்து உத்தரவிட கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/ எதிரி இம்மனுவில், கடந்த 10 வருடங்களாக திருச்சி, உறையூரில் கூலி வேலை செய்து வாடகை வீட்டில் வசித்து வருவதாகவும், இறுதி அறிக்கையில், இந்த மனுதாரரின் முழு பெயரோ, தகப்பனார் பெயரோ முகவரியோ எதுவும் கூறப்படவில்லை என்றும் முதல் தகவல் அறிக்கையில் ஆசாரி மகன் அருண் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இம்மனுதாரரின் தகப்பனார் பெயர் ரவிச்சந்திரன் என்றும், பெற்றோர் இல்லாத இம்மனுதாரர் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு தொடர் இயற்கை சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் மனுதாரர் / எதிரி குற்றமுறையீட்டாளரால் உண்மைக்கு புறம்பான வகையில் எந்த ஆதாரமும் இன்றி குற்றவழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் சம்பவ இடத்தில் எதிரியை கண்ணுற்றதாக சாட்சிகள் மூலம் வாக்குமூலம் எதுவும் பதியப்படவில்லை என்றும் மனுதாரரிடமிருந்து வழக்கு சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் இதர எதிரிகளிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் இம்மனுதாரர் எதிரியாக குற்ற வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் இறுதி அறிக்கையில் இம்மனுதாரர் குற்ற செயலில் ஈடுபட்டுள்ளார் என்பதை அறுதியிட்டு நிரூபிக்க தவறியுள்ளது என்றும் எனவே மனுதாரரை குற்ற வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென கோரியுள்ளார். மாறாக எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர் தரப்பில், மனுதாரர் / எதிரி குறித்து முழு விவரம் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மனுதாரரை சம்பவயிடத்துடன் சம்பந்தப்படுத்தி புகார் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்றும் மற்றும் அதுகுறித்து சூழ்நிலை சாட்சியங்களும்



JAYARAMAN RATHIKA

Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:52:59 +0530

பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் குற்ற செயலில் ஈடுபட்டார் என்பதை தெளிவுபடுத்தி நிரூபிக்கக்கூடிய அனைத்து சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் மேலும் சான்று பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் இந்நிலையில் மனுதாரர் / எதிரி தான் அவர் எந்த குற்றத்திலும் ஈடுபடவில்லை என விசாரணை மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும் குற்ற வழக்கினை விசாரணை செய்தால் தான் உண்மை நிலை தெரிய வரும் என்றும் எனவே, மனுதாரரை குற்ற வழக்கிலிருந்து விடுவிக்க கூடாது என்றும், வழக்கில் குற்றச்சாட்டு வனைந்து உடனடியாக விசாரணை செய்ய வேண்டியதாக உள்ளது என்றும் எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

7) இருதரப்பையும் தீர ஆராய்ந்ததில், மனுதாரர்/6–ம் எதிரி மீது முதல்நிலை நோக்கு இருப்பதை அறிந்தே வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் உண்மையில் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளாரா என்பது சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் தற்பொழுது தீர்வுக்காண முடியாது. முழுமையாக வழக்கில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்தால் மட்டுமே இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளுள் இந்த மனுதாரரும் ஒருவரா என்பதை தீர்வுக்காண முடியும். தற்பொழுது இந்த குற்றசம்பவம் நடந்து 7 வருடங்களாகி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு 4வருடங்களுக்கும் மேலான நிலையில், இந்த மனு காலம் தாழ்த்தி வழக்கில் குற்றச்சாட்டு பதிவு செய்வதையும், வழக்கின் விசாரணையும் காலம் தாழ்த்துவதற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் காண்கிறது. மனுதாரர் சம்பவ இடத்தையும் 1 முதல் 5 எதிரிகளின் இருப்பிடத்தையும் சார்ந்தவர் என்ற நிலையில், தான் தற்பொழுது 10 வருடங்களுக்கும் மேலாக திருச்சியில் வசித்து வருவதாக சொல்வதற்கு எந்த ஆதரவும் தாக்கல் செய்யாமல் சம்பவம் நடந்து 7வருடங்கள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவிலும், மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளிலும், உண்மைத் தன்மை இல்லை என்பதால் இந்த மனுவானது சட்டப்படியும்,



JAYARAMAN RATHIKA

Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:53:11 +0530

சங்கதிகளின்படியும் ஏற்கததகுந்தது இல்லையென்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவில், இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்துத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN RATHIKA

Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2025.07.09 18:53:22 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.